ஆச்சரிய
மான
கதை.

...ால்ய விவாஹம்
அதினால் வரும்
நன்மை தீமைகள்.

# EARLY MARRIAG... & ITS EVILS

...F THE REGISTR...
23 JAN 1925
...RAS ★ ...

K. VIJAY... ...HINAM,
ED... ...R.
THE TAMIL... FRIENDS.

P. K. N. PONN... ...Y PILLAI,
Pro...
P. K. Na... & Co.,
Sree Vilatch... ...Vilas,
VILLAPUR... ...DURA.

Print...
Arunodhayam... ...ress,
TUT...

...tered]  1... ...ice 1½ As.

411: 3427
N24.
177550.

ஓம்-தத்-ஸத்.

ஆஞ்சநேயர் துணை.

# பால்ய விவாகம்.

## அதினால்வரும்

## நன்மை தீமைகள்.

நம் முன்னோரெல்லோரும் திடகாத்திர தேகமுடையவர்களாய், பூரண தேகாரோக்கிய முடையவர்களாய், நீடித்த ஆயுளைப் பெற்றவர்களாய் வாழ்நதாரெனினும் அவர்கள் வழித்தோன்றல்களாகிய நாம் உருவத்திற் சிறியவராய், திடகாததிரமற்றுச் சரீரமெலிவுடையராய், என்றும் நோய்வாய்ப்பட்டழுந்தி அகால மரணமடைவதற்கு நியாங்கள் பலவுள அவற்றுட் பிரதானமானது பால்ய விவாகம். இப்பால்ய விவாகமென்னும் துர்வழக்கம் தமிழராகிய எம்மையே இருப்பிடமாகக் கொண்டுவிட்டது. அற்ப கருமத்துக்காயினும் அதிகம் சாஸ்திரம் பார்க்கும் தமிழர் பால்ய விவாகத்தால் விளைகின்ற எண்ணரிய தீங்குகளையுப் ஏன் ஆராய்ந்து பார்க்கின்றாரில்லை? கடவுளாற் படைக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவும் பொதுவாக ஓர் காலக்கிரமத்துககுள்ளாகவே யிருக்கின்றது. குணதோஷங்கள் இந்நியமத்திற் றங்கியிருக்கின்றன வென்பது வெளிப்படை. அறிவாளர்களால் வரையறுத்து வைக்கப்பெற்ற விதிகளும் எல்லைகளும் ஏனையபிறவும் இயற்கைக்கு விரோதமாகாதவையாதலின் அவற்றை நாம் கண்மூடித்தனமாய்க் கடந்து சென்று தான்சாக மருந்துண்டவன் கதியை எய்துவதெதற்காக? உதாரணமாக, ஒரு வாழை குலையையீன்று சின்னாட்களுள் அக்குலையை வெட்டினால் அதனால் யாதும் பய

னுண்டாகுமா? வாழைக்காரன் இயற்கைக்கு விரோதமா
கச் செல்லாது பருவகாலம் வரைக்கும் பொறுமையுடனி
ருந்து அக்குலையை வெட்டுவானாயின், கனியப்பழுத்த கனி
களைப் புசிப்பானன்றோ? அற்பமாம் ஓர் வாழைமரத்தோடு
சம்பந்தப்பட்ட விஷயத்தில் இத்துணை பொறுமையும் கவ
னமும் வேண்டுமென்றால், எண்ணரிய பிறவிதனின் அரிய
பேறாய இம்மானிடப்பிறவியை ஆறறிவோடுபெற்ற நாம்
எங்கள் விஷயங்களில் எத்துணை சாக்கிரதையா யிருக்க
வேண்டும்! மக்களாய்ப்பிறந்து மாக்களினுங் கேடாகச்
சீவிப்பதுவெட்கத்திற்கிடமானதன்றோ. மிருகங்கள் காமும்
பருவகாலத்தையனுசரிக்க, அவையினும் பன்மடங்குமே
லாய் நாம் கல்விபயிற்சி நூலாராய்ச்சி தெய்வபக்தி முதலி
யவற்றால் அறம் பொருள் இன்பம் வீடுஎன்னும் நால்வகைப்
பேற்றையும் பெறுவதற்கு சௌகர்யங்களுடையராய் விளங்
கியும் பகுத்தறிவில்லாப் பேதைகள்போல நடந்து மிருகங்க
ளினும் கீழாவதென்னே? கேவலம்! மிகவுங்கேவலம்! இத்
துர்வழக்கம்மேலைதேசங்களிலிருந்து இங்கு வந்ததென்று
கூறவும் இடமில்லை. எறக்குறைய 30 வயதிற்கு மேலாக விவா
கஞ்செய்யும் வழக்கம் ஐரோப்பியரிடத்துக் காணப்படுகின்
றது. ஐரோப்பிய ஆடவர்கள் பெரும்பாலும் 40,45,50 வயது
களில் விவாகஞ்செய்வதுமுண்டு. ஆனால், உஷ்ணபூமியி
லுள்ள நாம் இவ்வளவு காலம் பிரமச்சாரியாரா யிருத்தல்
முடியாதென்பது பலர் கொள்கை. (விவாகமாகுமட்டும்,
பிரமச்சாரியவிரதத்தை வெள்ளையர்கள் அனுஷ்டிக்கின்றா
ரென்பது வீண்பேச்சு) பண்டைக்காலத்திலிருந்த நம்முன்
னோருக்குச் சீதளபூமியாயும் நமக்கு மாத்திரம் உஷ்ணபூ
மியுமாயிற்றோ? என்றும் இது உஷ்ணபூமியே. ஆதலின்,
நம் முன்னோரினும் நாம் காமுகராய்விட்டோமென்பது
வெளிப்படை.

விவாகத்தின் நோக்கம் இன்னதென்று அறியாத பலர் அது அற்பமாகிய சிற்றின்பநுகர்ச்சிக்காகவே ஏற்படுத்தப் பட்ட ஒன்றென வெண்ணுகின்றனர். இக்கொள்கை முற்றிலும் தவறுடையது. சிற்றின்பநுகர்ச்சிக்குமாத்திரமல்லாது சந்தானவிருத்திக்காகவென்பது முறையானது. நாம்உயிருடன்வாழ்வதற்குஉணவுஇன்றியமையாததுஉணவருந்தியே நாம் சீவிக்கின்றோம். ஆதலால்,நாம் சீவிப்பதுஉண்டுகளிப்பதற்காகவேயென அர்த்தங்கொள்ளுதல் தவறுதல்போலசந்தானவிருத்திக்கு கணவன் மனைவியுடையசேர்க்கை வேண்டப்படுதலால் நாம் சந்தானவிருத்திக்காகவே சிற்றின்பம் நுகர்கின்றோம்; அல்லது விவாகத்தின்நோக்கம் சிற்றின்பத்தில் ஆழ்ந்திருப்ப தென்று கூறுதலும் வழுவுடையதாம். இதை எச்சமயத்தாரும் மறுக்கினறிலர் பருவததிலே விவாகஞ்செய்து அதன்வாயிலாகமக்கட்பேறறைப்பெற்றுகணவனும் மனைவியுமாக இல்லற தருமத்தை நடாததித்தம்மக்களையும் நல்வழிப்படுத்தி ஆன்மலாபத்தைத் தேடுவதற்கே விவாகம் நியமிக்கப்பெற்றது.

இதன் உண்மைப்பொருளை யறியாதுவாணுளை வீணுக்குவோர்கதி யென்னகு மென்பதை இயம்பவும்வேண்டுமா. இனி சிற்றின்ப நுகர்ச்சியேவிவாகத்தின்பிரதான நோக்கமென்றாலும், அதிபால்யத்தில் தம் மக்களை மணமுடித்துவிட்டால் அவர்கள் அற்பமாகிய அதனைத்தானும. பூரண இன்பத்துடன் அனுபவிக்கும் ஆற்றலற்றவர்களாகின்றனர். என்னை பெற்றோரின் அறியாமை. பெற்றோர் தம் பலவேறு வசதிகட்காகத் தம் மக்களை அதி பால்யததில் விவாகஞ் செய்து வைத்து விடுகிறார்கள். அப்பால்யக் குடும்பத்துக்கோ மேற்பார்வைக்காரா வேண்டும். உலகம் இன்னதென்

றென அறியார். தமது தலைமேலேற்றிய சுமை எத்தன்மை யென அறியார் பராயமாகுமுன் பால்யருக்கு மணமுடித்து வைப்பதற்கும் அவர்கள் கழுத்தில் பாராங்கல்லைக்கட்டி ஆழியில்போடுவதற்கும் பேதம் யாதுமுண்டா? இல்லையே.

புருஷர்களுக்கு 32-வயதும் பெண்களுக்கு 26-வயதுமே மணமுடித்தற்கு ஏற்ற பராயமாம் அன்றி, 26-வயதுள்ள ஆடவனுக்கும் 20-வயதுள்ள பெண்ணுக்கும் விவாகஞ் செய்தல் அத்துணை கெடுதியை விளைக்கற்பாலதன்று. ஆனால் இக்காலத்தில் 17.18-வயதுள்ள சிறுவர்களுக்கு விவாகஞ் செய்து வைக்கின்றனர் 25-வயதுக்குமேல் ஒருவாலிபன் மணமுடித்தலை இந்நாட்களில் காண்பதரிதினுமரிது.

அன்றியும், பெண்பாலருடைய விஷயத்தை நோக்குங்கால் அது மிக்க பரிதாபகரமானதொன்றுகின்றது. அநேகவிடங்களில் 13, 14-வயதுள்ள சிறுமிகளுக்கு மங்கல்யம் சூட்டி விடுகின்றூர்கள். ஒரு சிறுமி ருதுவானதும் அவள் விவாகஞ்செய்வதற்குப்பராயப்பட்டுவிட்டாளெனப் பல அறிவிலிகள் எண்ணுகின்றனர். ஐயோ பரிதாபம்! சரீரத்தின்பலதத்துவங்களும பூரணசக்திபெறுமுன்13,14வயதுள்ள சிறுமிகள் குருவிக்குஞ்சுபோன்ற குட்டிகளையீனறு தமது உடம்புவலுவுமிழந்து எழுந்துநடக்கச் சக்தியுமற்று தாம்பெற்ற குழவிகள் குந்தியிருக்கத்தானும்சக்தியில்லாது அடிக்கடி நோய்வாய்ப்பட்டழுந்தி அகாலமரண மடைய அதனைப் பார்த்துச் சகிக்கமுடியாத அப்பால்யத்தாயும் அவள்பால்யக்கணவனும்நெடுங்காலம துயரத்துள் ஆழ்ந்து இடிந்தமண்சுவர்மேலமழைபெய்தாற்போல அவர்கள் நாளுக்குநாள் மெலிவுற்று ஈற்றில்நோய்வாய்ப்பட்டழுந்தி அகால மரணமடையச் செய்யும பெற்றேரின் அறியாமைக்கு ஐ

யோ! அநேகம் பெற்றோர் தாமிறக்கு முன்னரே பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளைகளைக்கண்டு மகிழுமாறு தங்கள் பிள்ளைகளைச் சிறுபராயத்திலே மணமுடித்துவைத்து விடுகின்றனர். வேறுபலர் பணவாசையாலும் ஏனைய பிறவற்றாலும் தூண்டப்பெற்றுத் தம்மக்களை அதிபால்யத்தில் மணமுடித்து வைக்கின்றனர். பெற்றோர், தம் சுயநலத்தைக் கருதியே இவ்வண்ணம் தங்கள் மக்களைக் கெடுத்துவிடுகின்றார்கள். அன்றித் தம்மக்களைப் பால்யத்தில் குடும்ப வாழ்க்கைக் குட்படச் செய்யாது வயோதிகப்பெற்றோர் பொறுமையுட னிருப்பாராயின் அவர்கள் (மக்கள்)தேகவலிவும், நரம்புமுறுக்கும் நல்ல ஆரோக்கியமும் பூரண தத்துவமுமுடையராய் திருமகளுறைந்த திவ்விய வதனமும் தேககாந்தியும் உடையராய் விவரித்துக்கூறமுடியாததாகிய ஓர் விதசந்துஷ்டியும் பேரொளிபரப்பும் இலக்குமீகரமுமுடையராய் விளங்கும்போது அவர்களைக் கண்ணாரக்கண்டு மகிழ்வதுபேரானந்தத்தைக்கொடுக்குமன்றோ? இதனை விடுத்து போலியானதும் நிலையில்லாததுமான கண்காட்சியை விரும்பித் தம் மக்களை அதிபால்யத்தில்விவாகஞ்செய்து வைக்க அவர்களும் அவர்கள்பெற்ற பிள்ளைகளும் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு வருந்தி முகப்பொலிவும், தேகவலுவும் அகமகிழ்ச்சியுமற்றவராய் நடைப்பிணங்கள்போலச்சீவிப்பதைக் கண்ணாரக்கண்டு வயோதிகப் பெற்றோர் தம் அந்தியகாலத்தில் எவ்வித மகிழ்ச்சியைத்தான் யடையவல்லரோ யாமறியேம்! பெற்றோர்தாம் இறக்குமுன்னர் தம் மக்களின் மணக்கோலத்தினையும் சிலகாலத்தால் பேரப்பிள்ளைகளையுங்கண்டு மகிழவிரும்பி எத்துணை தீமைகளைச் செய்து வருகின்றனர். பால்யக்கணவனும் மனைவியும் எக்கேடு கெட

டாலும் பெற்றோருக்குக் காரியமில்லை, ஆனால் அவர்கள் மாத்திரம் மணவிழாவையும் அதனோடு சம்பந்தப்பட்ட பிறவையுங்கண்டு மகிழ்ந்தாற் போதுமானது. 'அந்தோ! இவர்களின் மந்தமதி' நீரோ என்னும் அரசன் பபிலோனியா முதலிய நகரங்களிற் செய்த அட்டூழியங்கள், பால்ய விவாகஞ்செய்து வைத்துத் தம்மக்களைச் சித்திரவதைக் குள்ளாக்கும் பெற்றோரினுடைய கொடுஞ் செயல்களுக்கு இணையாகாதன்றோ.

பால்ய விவாகத்தால் விளைகின்ற தீங்குகளோ எண்ணரியன. அவற்றையெல்லாம் ஈண்டெடுத்து விரித்துரைப்பச்சாத்தியமாகாது. எனினும், பிரதானமானவற்றை ஆராய்வாம் பால்ய விவாகத்தால் சரீர வளர்ச்சி, தேகபலம், ஆரோக்கியம், மனமகிழ்ச்சி, பூரண ஆயுள் முதலியன பங்கப்படுமென்பதை முன்னர்க்கூறியுள்ளோம். இவ்விததீமைகளை யெல்லாம் ஒருங்கே யுள்ளடக்கியதாகிய பால்யவிவாகம் அறிவாளர்களால் விலக்கம்பட்டது நியாயம்பற்றியன்றோ? ஒருவாலிபன் வித்தியாசாலையில் கல்வி கற்கும்பொழுதே, சில பெற்றோர் அவனுக்கு மணம் பேசிவிடுகின்றனர். 'சும்மாகிடந்தசங்கை ஊதிக்கெடுத்தானாம் லிங்கப்பண்டாரம்' என்றார் போலகல்வி பயிற்சியில் தன் ஊக்க முழுவதையும் செலுத்தி யிருக்கும் பால்யனுக்கு மணம்பேசி அவன் மனசைப் பலவழிப்படுத்திக் கல்விகற்பதிலும் அறிவை வளர்ப்பதிலும் அவனைமுயற்சிக்காது தடுத்து அவனை மூர்க்கனுக்கிகா முகனுக்கிவிடுகின்ற பெற்றோரின் மதியென்னமதி? இவ்வண்ணமாய் அநேக வாலிபர் கல்விப்பயிற்சியை அலட்சியம் பண்ணுகின்றனர். அன்றியும், சொற்பகல்வியறிவோடு ஓர் அற்பஉத்தியோகமாயினும் ஒருவாலிபன் தே

டிக்கொண்டவுடன் அவனுக்கு மணம்பேசத் தொடங்கிவி டுகின்றனர். இவ்விதமாகப் பலர் கெட்டுப்போகின்றனர். செல்வராயுள்ளோரிற் பலர் தம்மக்கள் கல்விகற்றாலென்ன கற்காவிட்டாலென்ன பராயமெய்தினாலென்ன எய்தாவிட்டாலென்ன அதி இளம்பராயத்திலேயே மணமுடித்துவைக்கின்றனர். ஒருவன் விவாகஞ்செய்வதற்கு அவசியம் துவண்டப்படுவது பொருளென்பதே பலர் அபிப்பிராயம். பொருளுண்டானால் எவரும் பராயத்துக்கு முன்னரே மணமுடித்துக்கொள்ளலாமென்பது பலர் கொள்கை. மனைவியைப் போஷிக்கவும் ஆடையாபரணங்களால் அலங்கரிக்கவும் பிரசவகாலங்களில் ஆகவேண்டியவைக்குச் செலவு செய்யவும் பொருளிருந்தால் 14—வயசுப்பால்யனையும் குடும்ப வாழ்க்கையிற் சேர்த்துவிடுகின்றார்கள். என்னே! செல்வர்களின் அறியாமைபொருளிருந்தால் இயற்கைக்கு விரோதமாக நடக்கலாகுமா? பால்ய விவாகம் வறியவர்களால் இத்துணை தூரம் கையாடப்படுவதில்லை. அவர்களுடைய வறுமையே அக்கொடிய வழக்கத்தைக் கைக்கொள்ளவிடாது தடுக்கின்றது. ஒரு குடும்பம் வறுமைப் பிணியால் அனுபவிக்கின்ற கஷ்டங்களினும் பன்மடங்கு கொடியன பால்ய விவாகத்தால் விளைகின்ற கஷ்டங்களாம். ஆகவே வறியவர்கள் ஆசீர்வதிக்கப்பெற்றவர்களென அநேக மகான்கள் கூறியுள்ளனர்.

பால்ய விவாகத்தை அனுசரிப்பது நாகரீகத்தின் ஓர் அம்சமெனப் பலர் கருதுகின்றனர். அன்றியும் ஓர் சிறுமி ருதுவாகியபின்னர் விவாகஞ் செய்யாது பல வருடங்களுக்கிருப்பது வசைக்குட்பட்டதுமாயிற்று. இத்துர்வழக்கத்தின் பல தீமைகளையும் நன்கு அறிந்தவர் தாமும் இடையி

ட்டுவந்த உலகவழக்கத்தை (தமிழர் வழக்கத்தை) யனு சரிக்கவேண்டியதாயிற்ற. இது எவ்வளவு மூடத்தனம் ஒருவித அற்ப நன்மையைத்தானும் அளிக்கமுடியாத துர் வழக்கத்தை யனுசரித்து ஆடவரையும் மகளிரையும்பரா யமாகுமுன்னரே மணமுடித்து வைப்பதால் வருங் கௌ ரவந்தானென்னே? ஆண் பெண் இரு பாலரும் விவாகஞ் செய்யுமுன்னரே இல்லற வாழ்க்கையின் நுட்பங்களையும் இல்லற தருமத்தை நடாத்தும் விதி முறைகளையும், கிருக பரிபாலனம், சிசு பரிபாலனம் சுகத்தைப் பேணுதல் போ ன்ற பற்பல விஷயங்களையும் நன்கு கற்றறிந்திருக்கவேண் டிய ஆவசியகம் இம்மானுடையாக்கையை நாமெடுத்தது இவ்வுலகத்தின் நானாவித சுகபோகங்களையும் அனுபவிப்ப தற்கல்லாது ஆன்ம லாபத்தைத் தேடுவதற்கே யாதலால் ஒவ்வொருவரும் இல்லறத்திற் புகுந்து அதன் வியவகாரங் களில் ஈடுபட்டிருக்குமுனனரே பலகலை பயின்று அறிவை வளர்க்கவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். குடும்ப விய வகாரங்கள் இடையிடையே ஒவ்வொன்றாகத் தோன்றுத லும் மறைதலும் இயற்கையாதலின் அவற்றையெல்லாம் தடுத்து தம்மிடத்துள்ள உயர்வாகிய நோக்கத்தலே கண் ணுங் கருத்துமாயிருந்து இல்லறம்நடாத்துதற்கு இளமை யிற் கற்ற கல்வியே உதவக்கூடியது. போதிய கல்வி கற் குமுன்னரே சிறுவர் சிறுமியரை மண முடித்து வைப்ப தால் அவர்கள் கெட்டுப்போவதுமன்றி அவர்கள் சந்ததி யும் அமர பக்ஷச் சந்திரன் போலத் தேய்ந்து மாய்ந்து மறைந்துவிடும். அன்றியும், அதிபால்யத்தில் விவாகஞ் செய்த பெற்றோரின் பிள்ளைகள் பெரும்பாலும் நன்னோக் கமில்லாதவராய் இவ்வுலக வின்பங்களில் மாத்திரம்

அமிழ்ந்திருப்பர். ஆதலால், சகோதரசகோதரிகளே! குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்கம்புபோன்ற பால்ய விவாகமென்னும் துர்வழக்கத்தை யொழித்து நம்மக்களை நல்வழிப்படுத்துங்கள். உங்களுடைய சுய நலத்தைக்கருதி உங்கள் பிள்ளைகள் வாயில் மண்போடாதீர்கள். இப்போது சிறுவர் சிறுமியராய் உங்கள் முன்னிலையில் மழலைபேசிவிளையாடி உங்களை ஆனந்திக்கச்செய்யும் இவர்களே இன்னும் சிலகாலத்தில் உங்கள் அடிச்சுவட்டை பின்பற்றுவார்கள். அவர்களாயினும் தங்கள் மக்களைக் கெடுத்துவிடாதிருக்க நீங்களே முன் மாதிரி காட்டி வைக்கவேண்டும் சீக்கிரத்தில் விவாகஞ்செய்து வைக்காவிட்டால் உங்கள் பிள்ளைகள் கெட்டுப்போவார்களென்று எண்ணுகின்றீர்கள் போலும் பிள்ளைகளின் ஒழுக்கம் பெற்றோரிற்றங்கியிருப்பதென்பதை அறியீர்களா? நல்ல பழக்கமும் சரியான முறைப்படி தேசாச்சாரக்கல்வியும் இன்னோரன்ன பிறவும் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு இளம் பராயந்தொட்டு ஊண்டிவந்தால் அவர்கள் ஒருபோதும் ஒழுக்கத்தினின்றும் திறம்பமாட்டார்கள். எங்கள் சாதி முன்னேறுவதற்கும் எங்கள் தேயம் விடுதலையடைவதற்கும் நன்னோக்கமும் பூரண ஆயுளும் கல்வியறிவும் உள்ள பிள்ளைகளே வேண்டும். இவற்றிற்கெல்லாம் பால்யவிவாகம் ஓர் இடறுகட்டைபோன்றது. இனியாகுதல் இத்துர்வழக்கத்தை நந்தமிழ்மக்கள் ஒழிந்துவிட எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக. ஓம்.

நாவலென்றால் எல்லாம் நாவலாகுமா!

எங்கள் மருமக்கள் நாவலுக்கு ஈடாகுமா!

மனோரம்மியமென்ற

# மருமக்களின் நாவல்

ஓர் நவீன புதிய தமிழ் நாவல் இப்புத்தகத்தில் 9 கதைகள் உள்ளன. இவற்றுள் ஒவ்வொன்றும் படிக்கப் படிக்க ஆனந்தத்தையும் நல்விவேகத்தையும் உண்டாகும் புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது.

கதைகளின் விபரம்.

அத்தியாயம் 1. இராஜாம்பாள்.
,, 2. கோகிலாம்பாள்.
,, 3. ஜெகதாம்பாள்.
,, 4. தனலட்சுமி.
,, 5. லீலாவதி.
,, 6. அம்புஜம்.
,, 7. வனஜாட்சி.
,, 8. ஆனந்தவல்லி.
,, 9. பொது விஷய மர்மம்.

ஆக 9 நாவல் கதைகளடங்கிய ஷை 3 அணா விலையுள்ள புஸ்தகம். நமது அச்சாபீஸ் பிரபலமாகும் பொருட்டு 2 அணாவுக்கு விலைக்குத் தரக்கூடும்.

நற்புத்தி புகட்டக்கூடிய உலக விசித்திரக்கதைராயல் 40 பக்கங்களடங்கிய நயம் சுத்தப்பதிப்பு புஸ்தகம் 1–க்கு விலை அணா 4.

# விளம்பரம்.

ஆத்ம சம்ரட்சணியின் பத்திராசிரியராகவிருந்த

சாத்தூர்

S. A. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய

# கமலவேணி.

இது ஒரு அருமையான தமிழ் நாவல். இருபாலரும் வாசித்து ஆனந்திக்கத்தக்கது. இதில் இலஞ்சம் வாங்கிய சப்மாஜிஸ்திரேட்டு அடைந்த கதி, இலஞ்சம் வாங்காத அதிகாரி அடைந்தமேன்மை, செட்டான செலவுகளினால் வரும் நன்மைகள், டாம்பீகச் செலவுகளினால் வரும் கேடுகள், செஷன்கோர்ட்டு விசாரணை முதலியவை அடங்கியுள.

(104) பக்கங்களுள்ளது ... ... விலை அணா 0-10-0

## திருமூலர்திருமந்திரம் 3000பாட்டுகளடங்கியது.

478 பக்கம் கிளேஸ் காகிதத்தில் காலிகோ பயிண்டு செய்தது. புஸ்தகம் 1-க்கு ரூ 1-8-0 யுள்ளதை நமது அச்சாபீஸ் பிரபலமாகும்பொருட்டு ரூ 1-க்கு கொடுக்கப்படும்.

## நற்புத்தி புகட்டக்கூடிய உலகவிசித்திரக்கதை.

ராயல் 40 பக்கங்களடங்கிய நயம் சுத்தப்பதிப்பு புஸ்தகம் 1க்கு விலை அணா 4.

புஸ்தகம் கிடைக்குமிடம்.

அருணோதயம் பிரிண்டிங் பிரஸ், தெற்கு ராஜ தெரு. தூத்துக்குடி.